
புரட்சிக் கவிஞர்
பாவேந்தர்

# பாரதிதாசன்



## நூற்றாண்டு விழா

சிறப்பு மலர்

8416
பாரதி
03-1991
64/A

கொழும்பு
பழைய நகர
மண்டபம்

முத்தமிழ் மன்றம்
கலைஞர்
கம்பனாதாசன்

## பாவேந்தரின் நற்பாடல்கள் சில...

ஈதல் இன்பம்
ஒற்றுமை அமைதி
சொற்பெருக்காற்றல் கொள்
நினைவினில் தெளிவு கொள்
மதியடியோடு நட
உள்ளதை பேசு
அழுபவன் கோழை
கெட்ட சொல் நீக்கு
சிரித்து பேசு
நூல் பயில் நாடொறும்
நேரம் வீணாக்கேல்
பிறர் நலம் நாடு
பேராசை தவிர்
மூத்தவர் சொற் கேள்
விடியலில் கண் விழி
வேர்க்க விளையாடு

- பாவேந்தர்


# பிறவுண்சன் தொழிலகம்

# BROWNSON INDUSTRIES

*139, BANKSHALL STREET,*

*COLOMBO 11.*

*PHONE: 27197*



# ஈழத்தின் தனிப் புகழும் இசைத்த பா வேந்தன்

'பல்கலை வேந்தர்'
சில்லையூர் செல்வராசன்

'' தென் திசையைப் பார்க்கின்றேன்! என் சொல்வேன்! எந்தன்
சிந்தையெலாம் தோள்களெலாம் பூரிக்கு தடடா!''
என்றிசைத் தெம் ஈழத்தின் இராவணப் பார் வேந்தை
இறுமாந்து விதந்து கவி இயற்றிய பா வேந்தே!
அன்றவன் போல் இன்று கவி ஆற்றலினால் நீயும்
ஐயிரண்டு திசை முகந்தும் நின் புகழை வைத்தாய்!
'' என்றுமுள தென் தமிழால் இருக்கின்றேன்!'' என்றாய்!
எந்தனது சிந்துக்கும் தந்தையே! வாழ்க!
குன்று நிகர் இராவணன் போல் கொடியோச்சிச் கவிதைக்
கோனாகத் .தலை பத்துக் கொண்டவனே இவனும்
என்றுரைக்கும் வாறிசைத்தாய்! எப் பொருளை விட்டாய்?
எமனுக்குன் தச உயிரை எடுப்பதெனில் இலேசா?
இன்று நூற்றாண்டு விழா எடுக்கின்றோம் நாங்கள்!
எதிர் காலத் தமிழ் மக்கள் ஏற்றமெலாம் கொள்வார்!
அன்றுந்தன் கவி பலித்த அந் நிலையில் கோடி
ஆண்டு விழா உனக்கெடுப்பர் அனைத்துலகத் தமிழர்!

" கல்வியில்லை உரிமையில்லை பெண்களுக்கு
கடைத்தேற வழியின்றி விழிக்கிறார்கள் "

**With best compliments from :**

# THE PACIFIC PRESS (PVT) LTD.

267, WOLFENDHAL STREET,

COLOMBO-13.

Phone : 437041

**With best compliments from :**

Exporters of Sri Lanka
Products and Produce

# DAMAYNTHI ENTERPRISE AND EXPORTERS

22, SANGAMITTA MAWATHA - COLOMBO-13 SRI LANKA.
Telephone : 541265 Cable: Manickams

Telex: 23054 Royale CE }
22970 Royale CE } Attn Damexpo

Fax: 541265

**Exporters of**

Rice, Rice Flour, Spices, Jams, Chutneys, Pickles etc.
Kitchenwares such as Coconut Scrapers, Wodden/Alumiuium Utensils.
Cordials, Coconut/Kitul Treacle - Batiks, Handicrafts and other
Sri Lanka Produce

WE GUARANTEE PURITY AND QUALITY OF ALL
PRODUCTS AND PRODUCE
(Foreign enquiries are welcome)

# பாவேந்தரின் இலக்கியப்பணி மனங்கொண்டு போற்றத்தக்கது

### இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சரின்

## வாழ்த்துரை

கொழும்பு முத்தமிழ் மன்றம் ஏற்பாடு செய்துள்ள பாரதிதாசன் நூற்றாண்டு விழா 3.3.91 அன்று பழைய நகர மண்டபத்தில் நடைபெறவிருப்பதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பாரதியாருக்குப் பின் தமிழ் மக்கள் மத்தியில் சமூக விழிப் புணர்ச்சி ஏற்படுத்திய தரமான கவிதைகள் புரட்சிக் கவிஞராகிய பாரதிதாசனுக்கு உரித்தானதாகும். தமிழுக்கும், தமிழக சமுதாய சீர்திருத்தத்துக்கும் இவர் ஆற்றிய இலக்கியப்பணி என்றென்றும் மனங்கொண்டு போற்றத்தக்கது. அவ்வாறான ஒரு உயர்கவிக்கு முத்தமிழ் மன்றம் விழா எடுப்பது அம் மன்றத்தினரின் இலக்கிய உள்ளுணர்வுகளை வெளிக்காட்டுகிறது. பாரதிதாசனுடைய நூற்றாண்டு விழா இலங்கையில் மாத்திரமல்ல உலகில் தமிழர் வாழும் பகுதியெல்லாம் விழா எடுத்து கொண்டாடுவதற்கு ஏற்றதாகும். எனவே இவ்வாறான பணியை செய்கின்ற முத்தமிழ் மன்ற அமைப் பாளர் கம்பளை தாசன் அவர்களுக்கும், அவர் சார்ந்த மன்றத்தினருக்கும் எனது அன்பும் ஆசியும் என்றும் உரித்தாகுக.

**பி. பி. தேவராஜ்**
*இந்துசமய, கலாசார, இராஜாங்க அமைச்சர்*

அறங்கிடந்து பண் பாடும்,
அன்பிருந்து சதிர் ஆடும்,
திறங்கிடந்த நாகரிகம்
செய்து தந்தது தமிழ்நாடு

*With best compliments*

*from*

# LANKA COMMERCIAL CENTRE

*General merchants Exporters Importers*
*Dealers in pure coconut oil & poonac*

*77, 79, Wolfendhal Street,*

*Colombo-13.*

*T'phone: 35919*

# கொடுமைக்கு எதிராகப் போராடியவர்

முஸ்லீம் சமய பண்பாட்டு அலுவல்கள்
இராஜாங்க அமைச்சரின்

## வாழ்த்துரை

தமிழுக்கு அமுதென்று பேர்! அந்தத்தமிழ்

இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

ஆம், தமிழே உயிர், உயிரே தமிழ் என்று பாடியவன்தான் பாரதிதாசன்.

''கோரிக்கையற்றுக் கிடக்குதன்னே

வேரில் பழுத்த பலா''

என்றும் பாடினான்.

அண்ணல் நபிகள் நாதர் (ஸல்) அவர்கள் சொன்ன விதவைக்கு மறுவாழ்வை மறுமணத்தை தமிழகத்துக்குப் போதித்து புரட்சி செய்தான் பாரதிதாசன்.

''கொடு வாளினை எடடா!

கொடியோர் செயல் அறவே.''

என்று ஆவேசமாய் முழங்கி, கொடுமைகளுக்கெதிராகப் போர்க் கொடி உயர்த்த வேண்டும் என்று வலியுறுத்தினான் புரட்சிக் கவிஞன்.

அத்தகைய பாவேந்தன் பாரதிதாசனுக்கு இன்று பெருவிழா நடக்கிறது. இம்மாபெரும் விழாவுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

''பாரதிக்குப் பின் யார்? ''என்ற ஒரு வினாவைத் தொடுத்தால் பளிச்சென்று துளங்கும்.

அந்த விடைதான் பாரதிதாசன் அவனது கவிதைகளில் எனக்கு

பெரு விருப்புண்டு, ஆழமான பற்றும் பிடிப்பும் உண்டு. முற்போக்கு எண்ணங்களிலும் கொடுமை கண்டு கொதித்தெழும் ஓர்மையிலும் எனக்கு விருப்புண்டு. அதனால் தான் எனது பாராளுமன்ற உரைகளில் அவனது கவிதைகளை அடிக்கடி பிரயோகிக்கிறேன்.

கம்பளைதாசனை கடந்த நாற்பது ஆண்டுகளாக அறிவேன் நான். கலை, இலக்கிய நாடக விழாக்களென்றால் பம்பரமாய் சுழன்று செயலாற்றுபவர் அவர் எடுத்த காரியத்தை முடிப்பதில் சமர்த்தர் எனவே கம்பளைதாசன் எடுக்கும் விழா வெற்றிகரமாக அமைய என் உள்ளம் நிறைந்த வாழ்த்துக்களை வெகு உற்சாகத்துடன் வழங்கிக் கொள்கிறேன்.

**அல்ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர் (பா. உ)**
முஸ்லீம் சமய பண்பாட்டு அலுவல்கள்
இராஜாங்க அமைச்சர்.

பொய்கையைச் சுற்றும் புதரெல்லாம் பூக்கள்
பூக்களில்வடியும் தேனெலாம் ஈக்கள்
ஈக்களில் எழுவன இனிய பாக்களாம்

*With best compliments*

*from*

# MASCONS LIMITED

*175, SRI SUMANATISSA, MAWATHA*

*COLOMBO - 12.*

*PHONE: 25561-3*

# தமிழ் உணர்வூட்டுவோம் தமிழ் வளர்ப்போம்

## கம்பனிதாசன்

''சிங்களத் தீவினிக்கோர் பாலம் அமைப்போம் ''என்றார் மகாகவி பாரதியார்-அவரின் பாராட்டைப் பெற்ற பாவேந்தர் பாரதிதாசன் ''சிங்களம் சேர் தென்னாட்டு மக்கள் தீராதிதீரர் என்று ஊது, ஊது சங்கே ''என்றார்.

இந்த இரு பெரும் கவிஞர்களும் இலங்கை வாழ் மக்களை இலங்கை திருநாட்டை பாட்டிலே புகழ்ந்து பாடியதை இலங்கையில் உள்ள மக்கள் நினைவு கூர்ந்து பாவேந்தர் பாரதிதாசனுக்கு விழாவெடுத்து சிறப்பிக்கின்றோம்.

இந்த ஆண்டு பாவேந்தரின் நூற்றாண்டாகும் - உலகெங்கும் வாழும் தமிழ் பேசும் பெருமக்கள் அவருக்கு விழா எடுத்து சிறப்பிப்பது கடமையாகும் இலங்கையின் தலை நகரான கொழும்பில் பாவேந்தருக்கு விழா எடுக்கப்படுகிறது இது போல இலங்கையின் பல பாகங்களிலும் அவருக்கு விழா எடுத்து சிறப்பிக்க வேண்டும்.

''நம்முடைய தாய் மொழிக்கு எவன் பகைவனோ, அவன் எனக்கும் பகைவன்'' என்று சொன்னார். அந்த அளவிற்கு தமிழ் மொழி உணர்வு அவரின் கவிதைகளில் இருப்பதைக் காணலாம் சமூகத்தின் புரையோடிப்போன சாதி, அறியாமை, மூடப் பழக்க வழக்கங்களை கடுமையாக சாடினார். தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகளுக்கு தமது கவிதைகள் மூலம் உயிரூட்டினார்.

''எங்கள் வாழ்வும் வளமும் மங்காத் தமிழ் என்று சங்கே முழங்கு என்று முரசறைந்தார். அத்தகைய தமிழ் உணர்வு பொங்கும் கவிதைகளை தந்த பாவேந்தரின் பணிகளை நாம் நினைவு கூரும் வண்ணம் அந்த கவிஞரின் கவிதா ஆற்றலை மற்றவர்கள் அறியும் வண்ணம் செயல்படுத்த வேண்டும்.

தமிழர்கள் தமிழ் மொழியை மறந்து வாழ்வதைக் கண்ட பாவேந்தர் மனம் வருந்தி ''தமிழர்கள் செறிந்து வாழும் தமிழ் நாட்டில் தெருக்களில் தமிழ்தான் இல்லையே என்று வருந்தினார். ஆகவே பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டின் போது, பாரதிதாசன் எத்தகைய கனவு கண்டாரோ, அந்த கனவை நனவாக்க, இந்த ஆண்டில் நாம் நல்ல தமிழில் எழுதவும், பேசவும் உறுதி எடுப்பதன் மூலம் அவருடைய தமிழ்க் கனவு நனவாகும்.

— வாழ்க தமிழ் மொழி —

With best compliments from :

# K. P. M.
# JEWELLS

GEM AND JEWELLERY

PROPRIETOR
S. Krishnapillai

144-2B, 2nd FLOOR,

SEA STREET - COLOMBO-11.

PHONE 431868

அமுதென்று சொல்லடா செந்தமிழ் பணியினை
அறமென்று கொள்ளடா செந்தமிழ் பணியினை"

— பாவேந்தர்

With best compliments from :

# NEW KIRUPA STORES

GENERAL MERCHANTS

Dealers in Cake Ingredients Essence
Desiccated Coconut & Food Items

23, GABOS LANE,

COLOMBO-11.

Phone: 27900

# காலக்கவிஞன்

பாரதி பாடென்று சொன்னவுடன்
பாடிய மறவன்
பார் அதி நீரனென்று பாரதி
புகழ்ந்த புலவன்
கனக சுப்புரத்தினம் என்று
காத தூரம் இருந்த பெயரைச்
கவி பாரதிக்கு தாச னென்று
கச்சிதமாய் சூட்டிக்கொண்டான்
நிமிர்ந்த நோக்கு நெரித்த புருவம்
நெற்கதிர் கட்டு மீசைக் கொண்டவன்
இவனோர் சுருட்டுக் கவிஞன் - புகைச்
சுருட்டுக் கவிஞன் - இவன்
புரட்டுக் கவிஞனாவான்
மூடப்பழக்க மெல்லாம் தலைகீழ்ப்
புரட்டும் கவிஞனாவான்
கருத்துக் கவிஞன் சற்றுக்
கருத்த கவிஞன்
காலக் கவிஞன் அவன்!

முத்தமிழ் அறிஞர்
டாக்டர் கலைஞர்
மு. கருணாநிதி

"சினம் அடக்குதல் வேண்டும் சினம்
உனக்கே கெடுதியைத் தூண்டும்"

*With best compliments*

*from*

# AMBAL CAFE

*For your requirment of*
*quality & tasty vegetarian food*

## A. C. COMMUNICATIONS

*For your*
*I. D. D. Calls — Telex — Fax — Photo copy*
*& Laminating*

## A. C. VEDIO VISION

*For quality*
*Tamil — English — Sinhalese & Indian Films*

*Visit:*

*104, ARMOUR STREET,*
*COLOMBO-12.*

*Fax & T'Phone No: 433656*



பாவேந்தர்

# அவர் தாம் பெரியார்

*அவர்தாம் பெரியார் — பார்*
*அன்பு மக்கள் கடலின் மீதில்*
*அறிவுத் தேக்கம் தங்கத்தேரில்* *(அவர்தாம்)*

*மக்கள் நெஞ்சில் மலிவுப்பதிப்பு*
*வஞ்சகர்க்கோ கொடியநெருப்பு*
*மிக்க பண்பின் குடியிருப்பு*
*விடுதலைப்பெரும் படையின் தொகுப்பு!* *(அவர்தாம்)*

*தில்லி எலிக்கு வான்பருந்து*
*தெற்குத் தினவின் படைமருந்து*
*கல்லாருக்கும் கலைவிருந்து*
*கற்றவர்க்கும் வண்ணச் சிந்து!* *(அவர்தாம்)*

*சுரண்டுகின்ற வடக்கருக்குச்*
*சூள் அறுக்கும் பனங்கருக்கு!*
*மருண்டுவாழும் தமிழருக்கு*
*வாழவைக்கும் அருட்பெருக்கு!* *(அவர்தாம்)*

*தொண்டு செய்து பழுத்தபழம்*
*தூய தாடி மார் பில்விழும்*
*மண்டைச் சுரப்பை உலகு தொழும்*
*மனக்குகையில் சிறுத்தை எழும்!* *(அவர்தாம்)*

*தமிழர் தவம் கொடுத்த நன்கொடை*
*தன்மானம் பாயும்தலை மேடை*
*நமக்குத் தாண்டி வந்த வாட்படை*
*நமைஅவரின் போருக் கொப்படை!* *(அவர்தாம்)*

*(26-8-58)*

**ARS BRAND**

**MOSQUITO COIL**

SAFE AND EFFECTIVE

Manufactured by

**Lanka Mosquito Coil Company (Pvt) Ltd.**

244, Bankshall Street, Colombo - 11

Telephone: 25529 & 545348

" எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு "

**With best compliments from :**

**VANITHA JEWELLERS**

133, SEA STREET,

COLOMBO - 11.

# பாரதியை மிஞ்சியவர்

அ. பொ. செல்லையா (B Sc)

கத்துங் கடல் அடக்கிக் கவின் பெறுந் தமிழ் வளர்த்த முக்கூடல் மா மதுரையின் முச்சங்கங்களின் வரலாற்றிலோ அல்லது அதற்குப் பின் இன்றைய இருபதாம் நூற்றாண்டின் காலகட்டத்திலோ சமுதாய மறுமலர்ச்சிக்காக சமூக வளர்ச்சிக்காக புரட்சிக்கனலை ஏற்படுத்திய ஈடுயிணையற்ற கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் என்றால் அது மிகையாகாது.

மறுமலர்ச்சிகள் பலவற்றிற்கு வித்திட்ட பாரதியாரின் தாசனாகப் பாரதிதாசன் அவர்கள் இருந்தாலும் தமிழர் வாழ்வில் புரையோடிக் கிடக்கும் ஆரிய அடிமைத்தனத்தை - அறியாமை இருளை அகற்ற அரும் பாடுபட்டவர் பாரதிதாசன் அவர்கள்.

தனது விருப்பு வெறுப்புக்களை வெறுப்பவரும் விரும்பும் வண்ணம் தமது பெயருக்கேற்ற மிடுக்கோடும் நிமிர்ந்த நேரிய நடையோடும் கம்பீரத்தோடும் பாடல்களில் பெய்துவிடுவார் கருத்துக்களைச் சொல்வதில் யாருக்கும் அஞ்சாத வணங்காமுடியாகத் திகழ்ந்தார்.

பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கப்பாலிருந்து வந்த பறங்கியனுக்குப் பாரதம் அடிமையாக வாழக்கூடாது என்ற சுதந்திரக் கனலோடு - தனித்தன்மை வாய்ந்த தமிழகம் இந்திக்கு எடுபிடியாக இருக்கக்கூடாது என்ற புயலையும் எழுப்பி இந்திய தேசியத்தில் தனித்தன்மையையும் பேணி உரிமைப்போர் எழுப்பியவர் பாரதிதாசன்.

கொடுக்கக் கொடுக்க ஊறும் - பெருகும் பொருள் கல்வியாகும். அறிவியலை வளர்த்து உலகத்தோடு ஒட்ட ஒழுக வைக்கும் பகுத்தறிவைக் கொடுப்பது கல்வியாகும். தமிழரின் கல்வி நிலையை உணர்ந்து தமிழருக்கான கல்வியைக் கொடுப்பதற்கு ஆசிரியராகப் பணிபுரிந்து பெருந் தொண்டாற்றினார். ''யாருக்குங் கல்வி ஈந்திடல் வேண்டும்'' என ஆசிரியரின் கடமையை உரிமையோடு கூறுகிறார். மற்றும் —

''கல்லாரைக் காணுங்கால் கல்வி நல்காக் கசடர்க்குத் தூக்கு மரம் அங்கே உண்டாம்'' என்று எச்சரித்தார்!

சாதிச் சழக்குகளை - சாத்திரச் சடங்குகளை மிகுந்த மிடுக்கோடும் ஆத்திரத்தோடும் சாடிய ஆண்மையாளர். எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழாகக் கொண்டவர் உலகம் உண்ண - உண்ண வேண்டும், எல்லார்க்கும் உடைமை என்ற நியதியில் பொதுவுடைமைத் தத்துவத்தின் காவலனாக விளங்கியவர் பாவேந்தர் அவர்கள்.

சமயப் பற்றில்லாத கவிஞர்கள் பலரும் இயற்கையழகைக் கண்டு மயங்கியுள்ளனர். பாரதிதாசன் அவர்களும் அதற்கு விலக்கல்ல.

''இயற்கை எழிலை எல்லாம்
சிற்றூரில் காண ஏலும்'' என அழகின் சிறப்பை எல்லாம் சிற்றூரில் காண விரைகிறார்.

பாவேந்தரின் தமிழுணர்வுக்கு ஈடாக எதையும் சொல்லிட முடியாது.

மங்கை ஒருத்தி தரும் சுகமும்-எங்கள்
மாத்தமிழுக் கீடில்லை என்றுரைப்போம்''

''அமுதென்று சொல்லடா செந்தமிழ்ப்
பணியினை அறமென்று கொள்ளடா
செந்தமிழ்ப் பணியினை''

''தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாய்வதில்லை'' என்றெல்லாம் வற்புறுத்தி தமிழுக்குத் தொண்டு செய்வோர் இறவாத புகழை அடைவர் எனவும் அழுத்திக் கூறி, தமிழ் மொழிக்குத் தீங்கு என்றால் தம் உயிரையும் தர வேண்டும் தமிழன் தன் மானத்துடன் தலை நிமிர்ந்து தாரணியில் தனித்தன்மை பேணி வாழவேண்டுமெனத் தமிழனைத் தட்டி எழுப்பிய புரட்சிக் கவிஞர்.

இவர் பாரதியின் தாசனாக இருந்தாலும் தமிழின் தனித் தன்மையை வெளிக்கொணர்வதில் பாரதியை விடப் பன்மடங்கு வேகமும் தன்மானமும் மிக்கவர். இவரின் தமிழியக்கப்பணி இன்றைய தமிழர்களுக்கு அணியாக வேண்டும்!

''இன்னா செயினும் இனியவே செய்வர்
முன்னாள் மனிதர்! இந்நாள் அஃதிலார்!''

**With best compliments from :**

# Dedigama & Company

57, QUARRY ROAD,

COLOMBO-12

Phone : 20583

''எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு''

**With best compliments from:**

# Y. S. G. P. PANDIAN & COMPANY

Importers of General Hardware and
Scrap Metal Merchants.

246, OLD MOOR STREET,

COLOMBO-12.

Phone : 25833, 448072

Gram: ''Piglead'' Colombo

Telex: 21583 Teleco-CE

# பெரியார், அண்ணாவின் சிந்தனையைத் தூண்டியவர் பாவேந்தர்

- வேலணை வீரசிங்கம்

கொழும்பு மாநகரம் பல '' நூற்றாண்டு '' விழாக்களை கண்டுகொண்டிருக்கும் வேளையில் புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனின் நூற்றாண்டு விழாவும் நடைபெறுகிறது 'விழா' என்றால் ஏதோ ஒருவகை 'முதலீடு' எனக் கணக்குப் போடும் வர்த்தக வட்டாரத்தில் பகுத்தறிவுக் கவிஞருக்கு விழா எடுக்கும் நண்பர் கம்பனை தாசனையும் முத்தமிழ் மன்றத்தினரையும் எவ்வளவும் பாராட்டலாம்.

இலக்கிய வானில் சுவைபடப் பேசியும் இனிமையுடன் பாடியும் ரசனையுடன் எழுதியும் மக்களைக் கவர்ந்தவர்கள் ஏராளம் ஏராளம் அவர்களின் ஆக்கங்களில் காணும் ரசனைச் சுவைபோல் மனிதர்களின் வாழ்க்கைக்கு வேண்டிய வழிகாட்டல்கள் இருப்பதில்லை. இவற்றைச் சற்று ஆழமாகச் சிந்திக்கும் ஆற்றல் பெற்றவர்கள் உணர்வார்கள்.

வாழ்க்கையில் துன்பங்களினாலும் நோயின் வேதனையினாலும் துவண்டு கொண்டிருப்பவர்களுக்கு ஆசீர்வதிப்பதும் வேண்டுதல் செய்வதும் அவர்களுக்கு சற்று மன ஆறுதலையும் முக மலர்வையும் கொடுக்குமே தவிர வேதனைக்கும் துன்பத்திற்கும் உண்மையான பரிகாரத்தை அளித்துவிட முடியாது என்பது இன்றைய அறிவுலகம் கண்ட உண்மை. துன்பத்திற்கும் வேதனைக்கும் காரணங்களை கண்டறிந்து உண்மையான உதவிகளைப் புரிவதே மனிதாபிமான செயல். புரட்சிக் கவிஞரின் இலக்கியப் பணியும் இவ்வகைப்பட்டதே.

'' என்னையே நான் இழந்தேன் இன்ப உலகத்தில் வாழலுற்றேன். பொன்துகள் தென்றற் காற்றுப் புதுமனம் எண்டின் பாட்டு தெவிட்டாத எழில் கூத்தே '' பாவேந்தரை இப்படி பாராட்டியுள்ளார் டாக்டர் மு. வ. அவர்கள் தமிழ்மக்களின் இன்றைய அவலங்களுக்கு பாவேந்தரின் சிந்தனைகள் யதார்த்தமானவை. தன்மானத் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா இவர்களின் வழியில் சிந்தனையை தூண்டிய பாவேந்தருக்கு எடுக்கும் இவ்விழா ஒன்றுமையும் தமிழினத்திற்கு புகழையும் பெற்றுத்தர வாழ்த்துவோம்.

## ஒரு சொல்

இம் மலர் விளம்பரங்களில் இடம்பெற்றுள்ள கருத்துமிக்க கவி வரிகள் பாவேந்தரின் கவிதைகளில் இருந்து கையாளப்பட்டுள்ளன

With best compliments from:

## Suranjee Trade Centre
## &
## Suranjee Trading Co.,

IMPORTERS & EXPORTERS

Dealers in Sri Lanka Produce &
Commission Agents

**Head Office:**
156, Old Moor Street,
Colombo-12, Sri Lanka.
Phone: 26317, 23171, 545069

**Branches:**
KALA TRADES CENTRE
95 Old Moor Street,
Colombo-12, Sri Lanka.
Phone: 432014

Telex: 21974 Montien CE
Attn; Suranjee

Fax: (1) 54559 Motien Lanka

Cable: Sunmoon Colombo.

With best compliments from:

## G. T. ENTERPRISES

Dealers in Stationery

Tlx: 22926 Thanis CE Fax: 541019 540393

Office: 180 A, New Chetty Street,
Colombo - 13, Sri Lanka.
Tel: 26735 — 431880

★

## GOLDSTAR TRADERS

Importers, Exporters Tours & Travels

180, New Chetty Street,
Colombo - 13, Sri Lanka.
Telephone: 26735

Telex: 22926 THAMSCE Fax: 94 - 1 - 541019

Res: 61, Vanrooyen Street, Colombo - 13, Sri Lanka.

# நல்ல தமிழ்ச் சொற்கள்!

''எங்கும் தமிழ், எல்லாம் தமிழ் என்று கனவு கண்டார் பாவேந்தர் பாரதிதாசன். அதனால் தமிழ் மக்கள் பாவேந்தரின் கனவை நனவாக்க, முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் திரு. தமிழ்க்குடிமகன் எழுதிய 'பாவேந்தர் கனவு' என்ற நூலில் இருந்து பயன் கருதி ஒரு சொற்பட்டியல் இங்கே இணைக்கப்பட்டுள்ளது.

**Agency** ... முகவாண்மை, முகவர்கள், முகவாண்மையகம்
**Ambulance** ... திரிவூர்தி
**Art Prints** ... கலை அச்சீடுகள்
**Asbestos** ... கல்நார்ப் பொருள்கள்
**Avenue** ... கவின்பாதை, மரம் பயில்சாலை
**Bakery** ... அடுமனை
**Bankers** ... வைப்பகர்
**Biscuits** ... ஈரட்டிகள்
**Brothers** ... உடன்பிறப்புகள்
**Bureau** ... அறையகம்
**Business** ... வாணிகம்
**Cassette** ... பேழை, நாடா
**Cement** .. பைஞ்சுதை
**Centre** .. நடுவம், மையம்
**Chalan** ... அக இதழ், செலுத்துச் சீட்டு
**Chemicals** வேதிப்பொருள்கள்
**Clinic** ... மருத்துவகம்
**Coffee Mart** ... குளம்பித்தூள் அங்காடி
**Collections** ... திரட்டுகள்
**Complex** ... வளாகம்
**Computer Centre** ... கணிப்பொறி நடுவம்
**Concrete Works** ... திண்காரைப் பணியகம்
**Cone Icecream** ... கூம்புப் பனிகம்
**Consulatant** ... கலந்துரைஞர்
**Corporation** ... கூட்டிணையம், நிறுவனம், கூட்டகம்
**Cushion** ... மெத்தியம்
**Digital Watch** ... எண் கடிகை
**Drinks** ... பருகுநா, குளிர்பானம்
**Electricals** ... மின்பொருளகம்
**Electronics** ... மின்துகளகம், மின்னகம், மின்னணு
**Enterprises** ... வணிக மையம்
**Engineer** ... பொறிஞர்
**Fabricators** ... கட்டமைப்பாளர்
**Federation** ... கூட்டமைப்பு
**Fibre-glass Products** ... நாரிழை - ஆடி உருவாக்க வினையகம்
**Fibre Pipes** ... நாரிழைக் குழாய்கள்
**Finance** ... நிதியகம்
**Flasks** ... குடுவைகள்
**Foam Pillow** ... நுரையணை
**Footwears** ... தாளணிகள்
**Hard-wares** ... வன்மாழைகள், வன்மாழையகம்
**Home Appliances** ... இல்லப் பயன் பொருள்கள்
**General Stores** ... பல்பொருள் அங்காடி
**Ginning Factory** ... பஞ்சாலை, பஞ்சு பிரிப்பகம்
**Granites** . கருங்கற்கள்
**Guest House** ... விருந்தகம், விருந்தில்லம்
**Institute** ... நிறுவலகம்
**Institution** ... நிறுவனம்
**Juices** ... சாறுகள்
**Jeweller** ... நகை வணிகர்
**Laboratory** .. ஆய்வகம்
**Lamination** ... பளிச்சீடு, பளபளப்பு, ஒளிச்சுடர்
**Lodge** ... தங்ககம், தங்குமனை
**Manufacturers** ... உருவாக்கிகள்
**Market Complex** ... அங்காடி ஒன்றகம்
**Mess** ... உண்பகம்
**Milk Dairy** ... பால்பண்ணை
**Motorcycle** ... விசையுந்து
**Moulding Works** ... வார்ப்படப் பணியகம்
**Movies** .. இயங்குபடங்கள்
**Musical Centre** இசையகம்
**Nursing Home** ... நலம்பேணகம்
**Nylon** ... நெகிவிழை
**Opticals** ... கண்ணாடியகம்
**Organization** ... அமைப்பகம், அமைப்பு
**Paints** ... வண்ணெய்கள், வண்ணப்பூச்சு
**Paradise** ... பொன்னுலகம்
**Partnership** ... பங்காண்மை
**Petrol** ... எரிநெய்
**Plant** ... எந்திரகம்
**Plastic Industry** ஞெகிழித் தொழிலகம்
**Polythene** ... ஈகநார்
**Private Limited** ... தனிப்புற மட்டிட்டது.

(மறுபக்கம் பார்க்க)

## நல்ல தமிழ்ச் சொற்கள்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

Ration ... அளவணம், பங்கீடு
Research Centre ... ஆராய்ச்சி நடுவம்
Restaurant ... தாவளம், துய்வுணவகம்
Roofings ... கூரையீடுகள், கூரைகள்
Rubber ... தொய்வை
Scooter ... குதியுந்து
Service Centre ... பணி நடுவம்
Shampoo ... சீயநெய்
Shaving ... மழிப்பு
Sherbet ... மட்டுநீர்
Shoes ... மூடுகாலணி
Signal Light ... சைகை விளக்கு
Soap ... வழலை, சலவைக்கட்டி
Stadium ... ஆடக அரங்கம்
Stainless Steel துருவுறா எஃகிரும்பு
Stall ... நிலையகம்
Storage ... சேமகம்
Studio ... படமனை, படப்பிடிப்பகம்
Surgicals ... அறுவை வினைக் கருவிகள்
Sweet-stall இன்பண்ட நிலையம்,
Talkies ... பேசும்படவகம், படமேடை
Telefilm .. தொலைப்படம்
Telegram ... தொலை வரி
Teleprinter/Telex ... தொலையெழுதி
Tractors ... இழுவைகள்
Travels ... பயண ஏற்பாட்டாளர்
Uniform சீருடை
Varnish ... ஒண்ணெய்
Video ... வாரொளியங்கள்
Video-Cassette ... ஒளிப்பேழை
Water Paint ... நீர் வண்ணெய்
Welding ... பற்றவைப்பு
Works ... பணிகள்
Xerox ... படியடுப்பான், பலபடிமம்

●


" தமிழுக்கு தொண்டு செய்வோன் சாய்வதில்லை
தமிழ்த் தொண்டன் பாரதிதான் செத்ததுண்டோ "

With best compliments from :

**GOLDEN CAFE**

98, Bankshall Street,

Colombo - 11.

Tele: 24712

# பாவேந்தர்
# வாழ்க்கைக் குறிப்புகள்

*1891* — ஏப்ரல் 29 புதன் இரவு 10-15 மணிக்குப் புதுவையில் சுப்புரத்தினம் பிறந்தார். தந்தை கனகசபை, தாய் இலக்குமி.

*1895* — ஆசிரியர் திருப்புளிசாமி ஐயாவிடம் தொடக்கக் கல்வி, ஆறாம் வயதில் பாடல் புனையும் ஆற்றல் பெற்றார்.

*1908* — புலவர் சுப்புரதினத்தை வேணுநாயக்கர் வீட்டுத் திருமணத்தில் பாரதியார் காணும் பேறு பெற்றார்.

*1910* — வ. உ. சி. யின் நாட்டு விடுதலை ஆர்வத்தால் கனிந்திருந்த புலவர் பாரதியார், வ. வே. சு. டாக்டர் வரதராசுலு, அரவிந்தர் போன்றோர்க்கு புகலிடம் அளித்தார். பாரதியாரின் இந்தியா ஏட்டை மறைமுகமாகப் பதிப்பித்தல்.

*1918* — பாரதியாருடன் நெருங்கி பழகுதல் 10 ஆண்டு காலம் பாரதியாருக்கு உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும் தோழனாய் இருந்தார்.

*1920* — இந்திய விடுதலை அறப்போராட்டத்தில் பங்கேற்றல். பழனி அம்மையை மணத்தல், தம் தோளில் கதர் துணியைச் சுமந்து தெருத்தெவாய் விற்றல்.

*1928* — தன்மான இயக்கத்தில் பெரியார் ஈ. வே. ரா. வுடன் இணைதல்.

*1931* — புதுவை முரசு ஏட்டில் 'சுயமரியாதைச் சுடர்' என்ற 10 பாடல்களைக் கொண்ட நூலை கிண்டற்காரன் என்ற பெயரில் வெளியிடல்.

*1933* — மா. சிங்காரவேலர் தலைமையில் சென்னையில் நாத்திகர் மாநாட்டில் கலந்துகொண்டு வருகை பதிவேட்டில் " நான் ஒரு நிரந்தரமான நாத்திகன் " என்று கையெழுத்திடல்.

*1935* — இந்தியாவின் முதல் பாட்டேடான "ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம் தொடக்கம்.

*1937* — " புரட்சிக்கவி " குறுங்காவியம் வெளியிடல்.

*1938* — " பாரதிதாசன் கவிதைகள் " முதல் தொகுதி வெளியிடப்பட்டது.

*1939* — 'கவி காளமேகம்' திரைப்படத்திற்கு கதை - உரையாடல் பாடல் எழுதுதல்.

*1941* — " எதிர்பாராத முத்தம் " காவியம்.

*1942* — " குடும்ப விளக்கு " வெளியிடல்

*1943* — 'பாண்டியன் பரிசு' காவியம் வெளியிடல்.

*1962* — சென்னையில் தமிழ் எழுத்தாளர் சங்கச் சார்பில் பொன்னாடை அணிவித்து கேடயம் வழங்கல்.

*1965* — ஏப்ரல் 21ல் இயற்கை எய்தல் மறுநாள் புதுவை கடற்கரையில் உடல் அடக்கம் வாழ்ந்த காலம் 72 ஆண்டு 11 மாதம் 28 நாள்.

*1965* — ஏப்ரல் 21 புதுவை கடற்கரை பாப்பம்பா இடுகாட்டில் பாரதிதாசன் நினைவு மண்டபம் எழுப்பப்பட்டது.

*1970* — கவிஞரின் " பிசிராந்தையார் " என்ற நூலுக்கு சாகித்திய அகடமி பரிசு ரூ 5000 வழங்கியது.

*1971* — ஏப்ரல் 29 பாரதிதாசன் பிறந்த நாளை புதுவை அரசு விழாவாக கொண்டாடப்பட்டது.

*1972* — ஏப்ரல் 29 பாவேந்திரன் முழு உருவச் சிலையை புதுவை அரசினரால் திறந்து வைக்கப்பெற்றது.

"திங்களோடும் செழும்பரிதி தன்னோடும்
மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த தமிழ்."

— பாவேந்தர்

With best compliments from:

**S. V. S. & COMPANY**

Dealers in Poultry & Animal Feed and Fertilizer

65, WOLFENDHAL STREET,

COLOMBO-13.

PHONE: 432751, 28291

TELEGRAM: LEY & FREY

"தொண்டு செய்வாய் தமிழுக்கு
துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்தே."

— பாவேந்தர்

**TAI-PAN FOR CASIO**

**TAI - PAN TRADING COMPANY (PVT) LTD.**

NOW ALSO AT

**LIBERTY PLAZA**

Over 150 Models Calculators

2/1 Second Floor,
96, Prince Street,
Pettah Colombo 11.
Phone: 448772, 546072, 545616

Shop No. 12
Ground Floor,
Liberty Plaza
Colombo-3.



# வள்ளுவராய் மாறிய முகலாய ஓவியம்

— பட்டுக்கோட்டை இராஜேந்திரன்

திருவள்ளுவர், திருநாள் மலரவிருக்கிறது!

அவர் வாழ்வோடு தொடர்புடைய முக்கிய நிகழ்ச்சி ஒன்றை நாம் நினைவு கூரலாமா?

தெய்வப் புலவர் திருவள்ளுவப் பெருந்தகையின் திருவுருவப் படமொன்று, தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்டுத் தமிழகம் எங்கும் முக்கிய இடங்களிளெல்லாம் காட்சியளிப்பதை நாம் பார்க்கிறோம். ஓவிய விற்பன்னர் வேணுகோபால் சர்மா கைவண்ணத்தில் உயிர் பெற்ற அந்தத் திருவள்ளுவர் உருப்பெற மூல காரணமானவரே புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார்தான்!

1950-களில், புரட்சிக்கவிஞரின் மாணவனாகப் புதுவையில் நான் குருகுலவாசம் நடத்திக் கொண்டிருந்த நேரம் அது. அப்போதெல்லாம் அவர் வெளியூர்ப் பயணங்களில் உதவியாளனாக நான்தான் உடன் செல்வேன். அப்படி ஒருமுறை நாங்கள் சென்னைக்குப் பயணமானோம்.

புரட்சிக் கவிஞரின் நெருங்கிய நண்பரான வேணுகோபால் சர்மா, அப்போது சென்னை - மண்ணடியில் இருந்த வசந்த விகாரில்தான் தங்கியிருந்தார். பாவேந்தர் பெரும்பாலும் சென்னை வந்தால், அங்கு போய் அவரோடு தங்குவதுதான் வழக்கம். அதேபோல் அன்றும் நாங்கள் அங்கேதான் போய்ச் சேர்ந்தோம்.

தலைசிறந்த ஓவியரான வேணுகோபால் சர்மா, கையில் ஓர் ஒற்றை ரோஜாவோடு உட்கார்ந்திருக்கும் முகலாய மன்னர் ஒருவரின் ஓவியம் வரைய 'ஸ்கெட்ச்' பண்ணி வைத்திருந்தார்.

"என்ன சர்மா, இது யாரோட படம்?" என்றார் புரட்சிக் கவிஞர். சர்மா பதில் சொன்னார்.

"அட ஏம்பா நீ வேற...... நான் ஒண்ணு சொல்றேன் செய்றியா?" என்றபடியே, ஒரு மேஜை அளவுக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அந்தப் படத்தின் முன் நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தார், புரட்சிக் கவிஞர். வேணுகோபால் சர்மா, மிகக் கவனத்தோடு அவரைப் பார்த்தார்.

"இதோபார் சர்மா, வலது கையில் இருக்கிற ரோஜாவெ எடுத்துடு; அதுக்குப் பதிலா ஒரு எழுத்தாணியைக் கொடு. இடது கையில் ஓலைச் சுவடி போடு. மேல உடுப்பெல்லாம் வேணாம். வெறும் உடம்பு, இடது தோள்ல அங்கவஸ்திரம், அதாவது பாதி உடம்பை மறைச்சாப்ல இருக்கணும்; தலைல பெரிசா ஒரு முண்டாசு எழுதிருக்கியே? அதை அப்படியே சுருட்டி முடிஞ்சு ஜடாமுடி ஆக்கிடு... அப்புறம்..." ஒரு நிமிஷம் அந்தப் படத்தைப்

பரவலாகப் பார்த்தார் புரட்சிக் கவிஞர். ''ஊம்... முக்கியமான விஷயம். கால்ல, விரலெல்லாம் சேர்ந்தாப்ல இருக்கக் கூடாதுப்பா; கட்டை விரலை மட்டும் கொஞ்சம் விலக்கி நிமிர்த்திவிடு, அறிவாளிங்களுக்கு அப்படித்தான் இருக்கும்!'' என்று கூறிவிட்டு எழுந்தார்.

''சரி அதுமாதிரியெல்லாம் செய்தா என்ன ஆகும்?'' என்றார் வேணுகோபால் சர்மா.

''புரியலே? நீதான் ஓவியனாச்சே! நான் சொன்னதையெல்லாம் வெச்சி கற்பனை பண்ணிப்பாரேன்? .. இதுவே திருவள்ளுவர் படம் ஆயிடும்!'' என்றார் புரட்சிக் கவிஞர்.

நாங்கள் அடுத்த தடவை சென்னைக்குச் சென்றபோது, அந்த முகலாய மன்னர் சாட்சாத் திருவள்ளுவரே ஆகிவிட்டிருந்தார்!

''வேற என்ன செய்யணும்?'' என்றார் வேணுகோபால் சர்மா.

''நீ விட்டுடு காமராஜர் கிட்டே சொல்லி, அரசாங்கம் மூலமா எதுனா இதுக்கு உதவி செய்யமுடியுமான்னு நான் பார்க்கிறேன்!'' என்று சொன்னார் புரட்சிக் கவிஞர்.

புதுவைத் தமிழ்ப் பேராசிரியர் சு. குமாரசாமி என்பவருக்கு அப்போது பாராட்டு விழா ஒன்றினுக்கு ஏற்பாடாகியது. அப்போதைய தமிழக முதல்வரான திரு. கு. காமராசரையே அவ்விழாவிற்கு வரச் செய்யலாம் என்று கூறி, அவரைப் புதுவைக்கு அழைக்கின்ற பொறுப்பையும் தானே ஏற்றுக்கொண்டார் புரட்சிக் கவிஞர்.

5-2-1959 வியாழக்கிழமையன்று மாலையில், அந்தப் பாராட்டு விழா நடப்பதாக ஏற்பாடு அதே நாளில் அந்தத் திருவள்ளுவர் படத்தோடு வேணுகோபால் சர்மாவும் புதுவைக்கு வந்து சேரும்படிச் செய்யப்பட்டது.

புதுவையில் உள்ள வேதபுரீசர் கோவிலில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தலைமையில் பேராசிரியர் சு. குமாரசாமிக்கும் பாராட்டு விழா நடைபெற்றது. அவ்விழாவில் பங்கேற்ற தமிழக முதல்வர் காமராசர், அப்பேராசிரியருக்குப் பொன்னாடை போர்த்தினார்.

விழா முடிந்ததும், புரட்சிக் கவிஞர் வீட்டில் திருவள்ளுவர் படத்திறப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பெருமாள் கோவில் தெரு, 95-ம் எண்ணுள்ள தனது இல்லத்தில் நடைபெற்ற அவ்விழாவிற்கும் புரட்சிக் கவிஞரே தலைமை தாங்கினார். அப்போது அவர் ஓவியர் வேணுகோபால் சர்மாவையும் அவரால் உருவாக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் திருவுருவப் படத்தையும் பற்றி மனம் திறந்து பாராட்டிப் பேசினார். ''திருவள்ளுவர் இப்படித்தான் இருந்திருக்க முடியும்; இதை எவனாலும் மறுக்கமுடியாது'' என்று அழுத்தமாகக் குறிப்பிட்டு, அதைத் திறந்து வைக்குமாறு காமராசரைக் கேட்டுக்கொண்டு அவருக்குப் பொன்னாடை அணிவித்தார்.

காமராசர், திருவள்ளுவர் படத்தை திறந்துவைத்து, ஓவியர் வேணுகோபால் சர்மாவுக்குச் சால்வை அணிவித்தார். அன்றைய அவர் சொற்பொழிவு ரத்தினச் சுருக்கமாக அமைந்தது.

''நான் ஒண்ணும் வித்வான் கிடையாது. தமிழ்ல என்னென்னமோ ஏராளமா இலக்கியமெல்லாம் இருக்குங்கிறாங்களே, அதையெல்லாம் படிச்சதும் கிடையாது. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் என்னாட்டம் இல்லே; நிறையப் படிச்சவர்; புலவர், அப்படியாப்பட்டவரே திருவள்ளுவர் இப்படித்தான் இப்படித்தான் இருந்திருப்பார்னு அடிச்சுச் சொல்றார். அதனால் திருவள்ளுவர் இதாட்டம்தான் இருந்திருக்கணும்கிறேன். இந்தப் படத்தைத் திறந்துவைப்பதில் நான் உள்ளபடியே சந்தோஷப்படறேன்!'' - இதுதான் காமராசரின் அன்றைய பேச்சு.

அன்றைக்குத் தமிழக முதலமைச்சருக்கு மட்டுமல்ல; விழாவிற்கு வந்திருந்த அனைவருக்குமே புரட்சிக் கவிஞர் வீட்டில்தான் சாப்பாடு.

அதன் பிறகு அந்தத் திருவள்ளுவர் படம் சென்னையில் உள்ள தேனாம்பேட்டை பொருட்காட்சித் திடலில் காட்சிக்கு வைக்கப்பட்டது. பேரறிஞர் அண்ணா முதலான அரசியல் தலைவர்களெல்லாம் பார்த்துப் பாராட்டினார்கள். இதற்கெல்லாம் பிறகுதான் 15-2-1960 ல், காமராசர் ஆட்சிக் காலத்திலேயே திருவள்ளுவர் திருவுருவம் 15 காசு அஞ்சல் தலையாக வெளிவந்தது.

1975ல், சென்னை - அரசினர் தோட்டத்தில் உள்ள ராஜாஜி மண்டபத்தில், அரச ஏடான 'தமிழரசு' பத்திரிகையின் 5வது ஆண்டுவிழா கொண்டாடப்பட்டது. அப்போது தமிழக முதல்வராக இருந்த கலைஞர், ஒரு சிறப்பான காரியம் செய்தார். அதுவரை ராஜாஜி மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த வெள்ளையாட்சிக் காலக் கவர்னர்கள் படத்தையெல்லாம் எடுத்துவிட்டுத் தமிழறிஞர்கள் பன்னிருவரின் திருவுருவப் படங்களை வைக்க ஏற்பாடு செய்தார்.

அவர் ஆலோசனைப்படியே, வேணுகோபால் சர்மா வரைந்த திருவள்ளுவர் ஓவியம் நிற்பது போலச் சித்தரிக்கப்பட்டு ராஜாஜி மண்டபத்தில் வைக்கப்பட்டது. எளிமையான அந்த விழாவில் சர்மா உட்பட அந்த ஓவியங்களை வரைந்த அத்தனை ஓவியர்களுக்கும் முதலமைச்சர் கருணாநிதியால் நற்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

சென்ற ஆண்டில்தான் முதுமை காரணமாக உடல்நலிவுற்றார். திருவள்ளுவர் திருவுருவத்தை நமக்களித்த அந்த மாபெரும் ஓவியர் வேணுகோபால் சர்மா.

மருத்துவச் சிகிச்சைக்கென முதல்வர் கருணாநிதி. அரசு மூலம் பத்தாயிரம் ரூபாய் நிதி வழங்கினார். ஆயினும் அவர் நலம்பெற்று எழுந்தாரில்லை.

''நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் உலகு''

— என்ற குறளுக்கு இலக்கணமாகி விட்டார்! **நன்றி: தமிழ்மணி**

★


'' இமையேனும் ஓயாது தமிழுக் குழைப்பாய்
இன்பமே அதுவென்று தமிழுக் குழைப்பாய் ''

**With best compliments from :**

# SARASWATHI LODGE

191, Galle Road,

Bambalapitiya,

COLOMBO - 4.

Tele: 581913

அமுதென்று சொல்லடா செந்தமிழ்ப் பணியினை
அறமென்று சொல்லடா செந்தமிழ்ப் பணியினை

With best compliments from :

**United Merchants Ltd.**

Offset Printers and Carton Makers

529/19K, CYRIL C. PERERA MAWATHA,

COLOMBO-13.

Phone: 549688

பாவேந்தரின் நூற்றாண்டு விழாவுக்கு
வாழ்த்துக்கள்

With best compliments from :

**WESTERN TRADERS**

334, OLD MOOR STREET,

COLOMBO-12

''நல்லார் உறவு நாடுபவர் முன்னாள்
அல்லார் தன்மையே அடுப்பார் இந்நாள்.''

With best compliments from :

# RATHNA MAHAL JEWELLERS

97, SEA STREET,

COLOMBO - 11.

PHONE: 431357



''எல்லார்க்கும் கல்வி சுகாதாரம் வாய்ந்திடுக
எல்லார்க்கும் நல்ல இதயம் பொருந்திடுக!''

With best compliments from :

# COLOMBO CHEMICALS

Suppliers to Manufacturers, Confectioners and Bakers

64/6, DAM STREET,

COLOMBO-12.

PHONE: 449798

பூக்களில் வடியும் தேனெலாம் ஈக்கள்
ஈக்களில் எழுவன இனிய பாக்களாம்"

**With best compliments from :**

# SAMA IMPORTERS & EXPORTER'S

**Prop: S. Anthon**

82/93, SRI RAMANATHAN FLATS,

COLOMBO-13.

Phone : 448431

**Branches:**

JAFFNA - MANNAR

1. NAVANTHURAI 2 GURUNAGAR

3. VIDATHALTHIVU



பூந்துகள் கொட்டுகின்ற தென்றலே-உன் கை
பூவோ பொழில் என்பதோ தென்றலே?

**With best compliments from :**

# SVP Trading Co. (Pte) Ltd.

Importers & General Hadware Merchants

**Branches :**

262, Messenger Street,
Colombo-12
Phone: 448995

29, Prince of Wales Avenue,
Colombo-14
Phone: 435126, 546418

772, Prince of Wales Avenue,

Colombo-14.

Phone: 448991

"சிங்களஞ் சேர் தென்னாட்டு மக்கள்
தீராதி தீரரென்றூ தூது சங்கே!"

With best compliments from :

**Karthiha Traders**

General Merchants, Commision Agents &
Dealers in Ceylon Produce

32A, OLD MOOR STREET,

COLOMBO-12.

Phone : 545520



With best compliments from :

**M. Adam Bawa & Son**

246, MESSENGER STREET,
COLOMBO-12.
Phone : 435219



With best compliments from :

**Rafiya Industries Ltd.**

87, GRANDPASS ROAD,
COLOMBO-14.
Phone : 28845

"மூச்சோடும் அழகோடும் பெண் குழந்தை
முத்துப்போல் பிறப்பது தாய்நலமே"

**With best compliments from:**

# K. P. M. & COMPANY

**Paper Merchants & Stationers**
**Specialist in Wedding Cards, & Cake Wrappers.**

44-1/1, 1st Floor,
First Cross Street,
Colombo . 11.

Show room:
38, 1st Cross Street,
Colombo - 11.
T.P 433511



"எல்லார்க்கும் நல்ல இதயம் வாய்ந்திடுக
எல்லார்க்கும் கல்வி சுகாதாரம் பொருந்திடுக !"

**With best compliments from:**

# KAJAN

General Merchants, Commission Agents &
Local Produce

No 143, MALIBAN STREET,

COLOMBO-11

**Tel: 25389**

" தமிழர்க்குத் தமிழ் மொழியிற் சுவடிச்சாலை
சர்வகலாசாலையைப் போல் எங்கும் வேண்டும்."

With best compliments from :

**EASWARAN BROTHERS**

Manufacturers & Distributors for

SUPREME STEEL FURNITURE

267, SEA STREET, COLOMBO-11.

Phone: 422744, 435842, 447608 Telex: 21275 ESWARAN CE

**தமிழ் மணங்கமழும் வார சஞ்சிகைகள்**

குமுதம், கல்கண்டு, மாலைமதி, குங்குமம், முத்தாரம்,
வண்ணத்திரை, குங்குமச்சிமிழ், சுமங்கலி, ஜெமினி சினிமா,
திரைச்சுவை, சினிமா எக்ஸ்பிரஸ், தமிழ் நாட்டின் தலைசிறந்த
எழுத்தாளர்களின் நாவல்கள்.

தொடர்புகளுக்கு,

**L. முத்தையா அன் கம்பனி**

155, 2ஆம் மாடி

குமார வீதி – கொழும்பு-11.

Phone:

Office: 421595 Res: 449099

அவனே புலவன்
அவனே அறிஞன்
அவனே தமிழை
அறிந்தோன்;
அவனே —
தனக்கு என வாழாத்
தமிழன்; பொதுமை
இனத்துலக்கு என்றும்
இருப்பு

த. கோ.


**With best compliments from :**

# OVERSEAS AUTOMOTIVE PVT. LTD

*354, Sri Sangaraja Mawatha,*

*Colombo-10.*

*Phone: 431182, 438722* *Cable: MOTOR PARTS*

காதல் வாழ்வும், புகழ் வாழ்வும்
காட்டியதும் தமிழ் நான்மறைதான்!"

**With best compliments from :**

# DEVALANKA STORES

**Picture Framing, Nylon Hairwigs, Bangles, Brassiers,
Plastic Fancy Goods, Stainles Steel Rubber Toys,
Class, Mirror Diary, Greeting Cards & Calenders**

**117 - 119, SEA STREET,**

**COLOMBO-11.**

**Phone: 435278**

பாவேந்தர் நூற்றாண்டு விழாவுக்கு
வாழ்த்துக்கள்

# சுவர்ணா கோல்ட் ஹவுஸ்

உத்தரவாதமுள்ள 22 கரட் தங்க நகை வியாபாரிகள்

தொலைபேசி: 501789

**144, காலி றோட் - வெள்ளவத்தை,**

**கொழும்பு-6.**

" காக்கை இடத்திலுள்ள ஒற்றுமைகண்டு நீ
வாழ்க்கை நடத்தினால் நன்மை உண்டு "

With best compliments from:

# KALA TRADERS

Head Office: 151, DAM STREET,
COLOMBO - 12
T'phone: 435284, 435272, 448574, 448747

Branch:
KALA ENTERPRICES
222, Prince Street,
Colombo - 12.
T.P, 26552

Branch:
KALA TRADES CENTRE
95, Old Moor Street,
Colombo - 12.
T.P. 432014

" கண்ட கண்ட இடத்தில் துப்பாதே
துடுக்காய் எவரையும் பழிக்காதே "

With best compliments from:

# FONSEKA OIL STORES

No. 28, WOLFENDHAL STREET,

COLOMBO - 13.

Phone: 546486

''ஓதும் அந்தத் தமிழ் நான்மறை
உலகம் போற்றும் மூத்தமிழ்தான்.''

**With best compliments from :**

# PRATHA JEWEL

Buyer & Sellers of Gold & Silver
Jewellery Orders will be Executed in Time

**38, W. A. SILVA MAWATHA,**

**WELLAWATTE,**

**COLOMBO-6.**



''மூதறிஞர் ஒழுக்க நெறிகள்,
முதலிற் கண்டதும் தமிழகந்தான்.''

**With best compliments from :**

# SUJATHA JEWELERS

**109/B, SEA, STREET,**

**COLOMBO - 11.**

**PHONE: 436918**

"அமுதென்று சொல்லடா செந்தமிழ்ப் பணியினை
அறமென்று கொள்ளடா செந்தமிழ்ப் பணியினை"

**With best compliments from :**

# AKBARALI HOTEL (PVT) LTD.
# NEW TRADE CENTRE

OLD TWON HALL

MAIN STREET, COLOMBO-11.

PHONE: 438578 - 541962

"புதியதோர் உலகம் செய்வோம்-கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்"

**With best compliments from :**

# Vijaya Press (Pvt) Ltd.

209, OLD MOOR STREET,

COLOMBO-12.

Phone : 432816

# யாழ் நூல் தந்த விபுலானந்தன்

– பாவேந்தர் பாரதிதாசன்

எத்தமிழால் வையம்
    இரும்பூது கொண்டிடுமோ
அத்தமிழால் வாழ்வை
    அகப்படுத்தி முத்தமிழால்
தொன்மொழிக்குத் தோலா
    துழைத்துயர்ந்தோன் சொல்லருமை
தென்மொழிக்கு யாழிசைத் தோன்.

அறிவறிந்த நாள்முதலாய்
    அந்தமிழும் தொண்டும்
நெறியறிந்த நீர்மையன்;
    நேர்மைக் குறியறிந்து
முத்தமிழ்க்கும் பண்ணானான்
    முச்சங்க யாழ்கண்டான்
எத்தமிழுக்கும் ஈந்தான் இலக்கு!

ஆங்கிலமும் ஆரியமும்
    நன்கே அறிந்திருந்தும்
பாங்கிருக்கும் பைந்தமிழ்க்கே
    தன்வாழ்வை ஓங்கிருக்கச்
செய்விபு லானந்த
    செம்மைத் துறவியினைக்
கைகுவித்து வாழ்த்தும்என் வாய்.

செம்மை நலங்கனிந்த
    செய்யுளைத் தீட்டுங்கை;
மும்மைத் தமிழை
    முழக்கும்வாய்; அம்மம்ம!
தெற்கே இலங்கைமுதல்
    செல்லும் இமயம்வரை
பற்றே படரும் தமிழ்.

*(1.11.48)*

"பண்டம் எதையும் பாழாக்காதே
நொண்டியைக் கண்டு சிரிக்காதே"

**With best compliments from :**

# M. S. HAMEED

66, Paradise Ferry Road,

COLOMBO-12.

**With best compliments from :**

# K. M. S. GANNY STORES

( Govt. Transport Contractor )

# ISLAND LODGE

**Rooms available for Visitors**

1st Floor - 2nd Floor - 3rd Floor - 4th Floor

Partner S. G. M. Buhari

**141, 143, Sri Kathiresan Street,**
**Colombo - 13.**
**Sri Lanka.**

**T.P. 698470**
**448358**
**447410**

"ஆதி மனிதன் தமிழன்தான்!
அவன் மொழிந்ததும் செந்தமிழ்த் தேன்."

With best compliments from:

**New Devi Jewellers.**
(Guaranteed Soverign Gold)

269, GALLE ROAD,
WELLAWATTE.
COLOMBO-06.
Phone : 580011

"தமிழிலாப் பிறமொழி நூல் அனைத்தும் — நல்ல
தமிழாக்கி வாசிக்கத் தருதல் வேண்டும்."

With best compliments from:

**Sri Muthumeenachi Jewellery**
JEWELLERS

152/B, SEA STREET,
COLOMBO-11.
Phone : 433164-29104

" சுண்ணாம்புக் கட்டியை நறுக்காதே நல்ல
சுவரிலும் கதவிலும் கிறுக்காதே "

Vaeni Sports Club

**With best compliments from :**

# VAENI SPORTS CLUB

# VAENI RECORD BAR
# VAENI FISH AQURRIAM

# VAENI VEDIO VISION

*33, BRASS FOUNDER STREET,*

*COLOMBO - 13.*

" யாவருக்கும் வாக்குரிமை இருக்குந் நாட்டில்
யாவருக்கும் கல்வி இருக்க வேண்டும் "

With best compliments from :

**NEW GANESAN PRINTERS**

22, Abdul Jabbar Mawatha,

COLOMBO-12.

T'Phone: 435422

" தமிழரின் தமிழ்க் குழந்தை
தமிழ்ப் பெயர் பெறுதல் வேண்டும் "

With best compliments from :

**M. G. M. PRINTING WORKS & INDUSTRIES**

102/2, Wolfendhal Street,

COLOMBO-13.

T'phone: 431964

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு - பாவேந்தர்

ஜெய்லக்ஷ்மி ஸ்டோர்ஸ்

**With best compliments from :**

# JAILAXMI STORES

*91 A Maliban Street,*

*Colombo-11.*

**T'phone: 26149 - 541329 - 447741 - 448547**

*" இமையேனும் ஓயாது தமிழுக்குழைப்பாய்*
*இன்பமே அதுவென்று தமிழுக்குழைப்பாய் "*

*— பாவேந்தர்*

**With best compliments from :**

# K. S. S. & Co.,

Dealers in Brass Copper Battery Aluminium,
Lead, Cast Iron, All kinds of Bottles &
All Sizes of Corks Ting ETC

123, New Moor Street,
Colombo-12.
Phone: 422899

Stores:
84, New Moor Street,
Colombo-12.



*" தமிழ் வாழ்ந்தால்தான்*
*தமிழர் வாழ்வார் "*

**With best compliments from :**

# KALA JEWELLARY

61, SEA STREET,
COLOMBO-11.
Phone: 433686

" அயல்மொழி தமிழை அண்டும் விழுக்காடு
தமிழ்மொழி தாழும்! தமிழன் தாழ்வான் "

**With best compliments from :**

# Solomon's Hardware Stores

8, GRANDPASS ROAD,

COLOMBO-14



" தமிழ் தமிழினம் தமிழிலக்கியம் இவற்றில்
ஒன்றுபோம் எனில் மற்றவும் ஒழியும் "

**With best compliments from :**

# Renarss Supplies Centre

Importers of Arron Bridses Tone Chinese Lion Head
Renby Tyres & Tubes Agents for
Sri Lanka Tyre Corporation

135A, WOLFENDHAL STREET,

COLOMBO-13.

phone: 432885. 434348

" பொதுவுடைமைக் கொள்கை திசைஎட்டும் சேர்ப்போம்
புனிதமோடதை எங்கள் உயிரெனக் காப்போம் "

*With best compliments*

*from*

# PAN AUDIO COMPANY LTD.

*31/1, STATION ROAD,*

*COLOMBO - 3.*

*SRI LANKA.*

*Phone : 574430, 575741*

*Telex : 23037 ANDRAJ CE*　　*Fax : 575741*

*Branch:*

*22, 1st FLOOR, LIBERTY PLAZA,*

*COLOMBO-3.*

# நன்றி...

★ பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா வெகு சிறப்பாக நடை பெற ஒத்துழைப்பு நல்கிய இந்து கலாசார இராஜாங்க அமைச்சு அதிகாரிகளுக்கும், அமைச்சர் மாண்புமிகு பி. பி. தேவராஜ் அவர்களுக்கும்,

★ வாழ்த்துரை வழங்கிய முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர் அவர்களுக்கும்,

★ விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துகொண்டவர்களுக்கும், சிறப்புரை கவிதாஞ்சலி, புகழ்மாலை சூடியவர்களுக்கும் பங்குபற்றிய கலைஞர்களுக்கும்,

★ விழா வெற்றிகரமாக அமைய ஒத்துழைத்த வெகுசனத் தொடர்பு சாதனங்களுக்கு, சிறப்பு மலருக்கு விளம்பரம் தந்து ஊக்குவித்த வணிகப் பெருமக்களுக்கும்,

★ கலை இலக்கிய முயற்சிகளுக்கு கரம் கொடுக்கும் அஸீஸ் மன்றத்தினர்க்கும்,

★ பாவேந்தர் நூற்றாண்டு விழா மலர் சிறப்பாக வெளிவர ஒத்துழைப்பு நல்கிய திரு. வேலணை வீரசிங்கம் அவர்களுக்கும், மலருக்கு இணைந்து பணியாற்றிய திரு. அந்தனி ஜீவாவுக்கும்,

★ மலரை சிறப்பாக அச்சிட்டு உதவிய ஸ்ரீ சக்தி அச்சக உரிமையாளர் திரு. சக்தி விக்னேஸ்வரன் மற்றும் அச்சக பணியாளர்களுக்கும்,

மற்றும் விழாவுக்கு என்னோடு துணைபுரிந்த திரு. நிலாம், திரு. இந்துநேசன், திரு. சர்தார், திரு. எஸ். எச். எம். ரிஷ்வி, என் இனிய தோழமைமிக்க நண்பர்கள் அனைவருக்கும் எனது இதய பூர்வமான நன்றி.

கம்பளைதாசன்

# பாவேந்தர் நூற்றாண்டு விழாவிற்கு

## எங்கள் வாழ்த்துக்கள்

### முதற் கவிஞன்

" பள்ளத்தில் வீழ்ந்திருந்த தமிழரெல்லாம்
பகுத்தறிவும் இனவுணர்வும் பெறுவதற்கு
உள்ளத்தில் ஒருசிறிதும் சலன மின்றி
உரமிக்க கவிதைவாள் கரத்தி லேந்தி
தெள்ளு தமிழ்க் கவிவெள்ளம் பெருக்கெடுக்கச்
செய்திட்ட முதற் கவிஞன் "

— சாமி பழனியப்பன்.

# AZIZ FOUNDATION

*17, NEW MOOR STREET.*

*COLOMBO - 12.*

அமுதென்று சொல்லடா செந்தமிழ்ப் பணியினை
அறமென்று சொல்லடா செந்தமிழ்ப்பணியினை

## AK AUDIO CENTRE

*For quality audio recordings*

## AK VIDEO VISION

*Professional video filming &*
*Latest Tamil, English & Hindi films Lending*

## AK TRAVELS

*Travel Consultants & Tour operators*

## ADAM AUDIO VIDEO HOME (Branch)

*For Quality Audio recordings, Video filming &*
*Video films lending library*

*198 A, Galle Road, Wellawatte. Phone: 586847*

AK

## AK GROUP OF COMPANIES

*110-1/1, SRI KATHIRESAN STREET,*

*COLOMBO 13.*

*HELLO: 26333, 449561*

Sri Sakthi Printing Industries Phone: 438536